DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC No. 703/2022 Crime No. 120/2022 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW7-ஆனந்த்பட் | Caste | |
| Father Name | பேச்சிமுத்து | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 48 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 23.01.2024 |

**எதிரி சந்த்ரா ஆஜர்.**

**முதல் விசாரணை-**

**1.** நான் தற்போது கொடுமுடி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதிதுறை நடுவர் நீதிமன்றத்தில் தலைமை எழுத்தராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2022 வருடம் நான் பவானி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பலகை எழுத்தராக பணியில் இருந்த போது கடந்த 21.03.2022 தேதியன்று நான் எனது அறையில் பணியில் இருந்த போது தலைமை எழுத்தர் அறையில் இருந்து சத்தம் வந்ததது. நான் அங்கு சென்று பார்த்த போது ஆஜர் எதிரி சந்த்ரா தலைமை எழுத்தர் சாந்தியிடம் வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார். சந்த்ரா தான் தாக்கல் செய்த மனுவை தலைமை எழுத்தர் ரிட்டன் செய்துவிட்டதாகவும், எதற்க்காக தனது மனுவை ரிட்டன் செய்தார் என்றும், எந்த பிரிவின் கீழ் அம் மனுவை ரிட்டன் செய்தார் என்றும், சந்த்ரா தலைமை எழுத்தரிடம் வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார்.

**2.** அப்போது பணியில் இருந்த தலைமை எழுத்தரை பார்த்த சந்த்ரா நீங்கள் நல்லாவே இருக்க மாட்டீங்க கடவுள் இருக்கிறார் பார்த்துக்குவார் என்று சொல்லிவிட்டு நான் அமர்ந்திருக்கும் பிரிவிற்கு வந்தார். அங்கு வந்து அசல் வழக்குகளை பார்க்கும் பலகை எழுத்தரிடம் எதற்க்காக மனுவை ரிட்டன் செய்திர்கள் என்று மீண்டும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். பிறகு தலைமை எழுத்தர் வந்து இங்கு சத்தம் போடக்கூடாது என்று கூறி எதிரி சந்த்ராவை அனுப்பி வைத்துவிட்டார். அப்போது சென்று விட்ட எதிரி மீண்டும் இரண்டு நாட்கள் கழித்து 23.03.2022 தேதியன்று நீதிமன்ற தலைமை எழுத்தர் அறைக்கு வந்தார். அங்கு வந்து மீண்டும் மனுக்களை திரும்ப தாக்கல் செய்வதாகவும், நீங்கள் மீண்டும் ரிட்டன் செய்தால் நீங்கள் எழுதும் ஒவ்வொரு காரணத்திற்கு எனக்கு பதில் சொல்ல வேண்டும் என்று கூறி மனுவினை தாக்கல் செய்தார். அதற்கு தலைமை எழுத்தர் எதிரியிடம் நீங்கள் சற்று வெளியில் இருங்கள் என்றும் நான் மனுக்களை சரிபார்த்துவிட்டு திரும்ப உங்களை அழைக்கிறேன் என்று கூறினார்.

**3.** அதற்கு எதிரி நான் இங்கிருந்து செல்லமாட்டேன் என்றும், அவ்வாறு நான் சென்றால் நீங்கள் நான் தாக்கல் செய்த மனுவிலிருந்து எதாவது ஒரு பேப்பரை கிழித்து எறிந்து விடுவீர்கள் அல்லது தூக்கி வெளியே வீசி விடுவீர்கள் என்று கூறினார். உடனே தலைமை எழுத்தர் நீதிபதி

அம்மாவிடம் இது குறித்து கூறுவதற்க்காக திறந்த நீதிமன்றத்திற்கு சென்றார் . நீதிபதி அம்மா அலுவலக அறைக்கு வருவதற்க்காக படியில் மேல் ஏறி வந்தார் அப்போது எதிரி சந்த்ரா அதே படியில் கீழே இறங்கினார். அப்போது நீதிபதி அம்மாவிடமும் மேற்படி மனு ரிட்டன் செய்தது தொடர்பாக வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அதனால் நீதிபதி அம்மா போலிசாரை அழைத்து எதிரியை அழைத்து செல்லுமாறும் இது குறித்து புகார் அளிக்குமாறு தலைமை எழுத்தரிடம் கூறினார். தலைமை எழுத்தரும் புகார் அளித்தார். இந்த வழக்கு தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் எதிரியால் குறுக்கு விசாரணை-**

**1.** எனக்கு இந்த நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல கடந்த சனிக்கிழமை சம்மன் வந்தது. நான் பவானி நீதிமன்றத்தில் இருந்து கொடுமுடி நீதிமன்றத்திற்கு கடந்த 23.05.2023 அன்று பணி மாறுதலில் சென்றேன். நான் பவானி உரிமையியல் நீதிமன்றத்தில் பணியாற்றிய போது எனது அறையானது தலைமை எழுத்தர் அறைக்கு அருகில் இருந்தது. நான் பணிபுரிந்த அறையில் என்னை தவிர மேலும் மூன்று அலுவலர்கள் இருந்தனர். நான் நிறைவேற்று மனுக்களை கையாள்வது தான் எனது வேலையாகும். போலிசார் என்னை 24.03.2022 அன்று மதிய இடைவேளைக்குள் விசாரித்தார்கள்.

**2.** சிறப்பு உதவியாளர் திரு.குமரேசன் என்னை விசாரித்தார். அவரை தவிர வேறு யாரும் என்னை விசாரிக்கவில்லை. அ.சா.1 புகார் கொடுத்தற்கு பின் தான் என்னை விசாரித்தார்கள். அ.சா.1 புகார் மனுவை 23.03.2022 அன்று மாலை கொடுத்தார். அந்த புகார் மனுவை நான் பார்க்கவில்லை. முதல் தகவல் அறிக்கையையும் நான் பார்க்கவில்லை. அசல் வழக்குகளை தலைமை எழுத்தர் எண் கொடுப்பார், மனுவாக இருந்தால் பலகை எழுத்தர் எண் கொடுப்பார். சம்பவத்தினத்தன்று பலகை எழுத்தராக திருமதி.கலைச்செல்வி என்பவர் பணியில் இருந்தார். புகார் மனுவானது 24.03.2022 அன்று கொடுத்திருப்பதாக கூறப்பட்டுள்ள நிலையில் நான் 23.03.2022 அன்று கொடுத்ததாக கூறியுள்ள நிலையில் போலிசார் என்னை 24.03.2022 அன்று மதியம் இடைவேளிக்குள் விசாரித்ததாக முன்னுக்கு பின் முரணாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

**3.** சம்பவம் நடந்த நேரம் 24.03.2022 அன்று மதியம் 3.00 மணி அன்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள நிலையில் அன்றைய தினம் மதியத்திற்கு முன்னரே போலிசார் என்னை விசாரித்தாக முன்னுக்கு பின் முரணாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. சத்தம் கேட்டு நான் வெளியே வந்தேன் மற்றவர்கள் வந்தார்களா என்று தெரியாது. அ.சா.1 புகார் மனு கொடுக்க சென்றதை நான் பார்க்கவில்லை. அ.சா.1 புகார் மனுவை டைப் செய்ததை நான் பார்க்கவில்லை. நீதிமன்றத்தில் தலைமை எழுத்தர் அறையிலும், நான் அமர்ந்திருந்த அறையிலும், வராண்டாவிலும், மற்ற இடங்களிலும் சிசிடிவி கேமரா உள்ளது.